**CC.No.444/2022 (ADDITIONAL MAHILA, DHARMAPURI.)**
**17.08.2023**

**சாட்சிக்கு சத்தியப்பிரமானம் செய்து வைக்கப்பட்டது.**

**PW8: திரு.பரமசிவம் ( சிறப்பு காவல் உதவி ஆய்வாளர்)**

**முதல் விசாரணை**

1) நான் தற்போது அதியமான் கோட்டை காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 02.05.2022 ம் தேதி கலையரசி என்பவர் மூலம் பெறப்பட்ட புகார் வாக்குமூலத்தின் பேரில் நிலைய மனு ரசீது எண்.224/2022 கொடுக்கப்பட்டு பின்னர் 03.05.2022 அன்று நிலைய குற்ற அறிக்கை எண்.158/2022 இந்திய தண்டனை சட்ட பிரிவுகள் 294 (பி), 323, 324 ன் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது. அன்றைய தினமே மாலை 04.00 மணியளவில் சம்பவ இடம் சென்று சின்னசாமி, அன்னாதுரை ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயாரித்து 1 முதல் 7 சாட்சிகளை விசாரித்து அவர்களை வாக்குமூலங்களை பதிவு செய்து மருத்துவர் வித்யா அவர்களை விசாத்து வாக்குமூலம் பதிவு செய்து காய சான்றிதழ் பெற்று எதிரிகள் இந்திய தண்டனை சட்ட பிரிவுகளின் 294 (பி), 323, 324 ன் கீழ் குற்றம் புரிந்ததாக இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளார். நான் ஆவணங்களின் அடிப்படையில் சாட்சியம் அளிக்கிறேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.3 ஆகவும், புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.4 ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5, பார்வை மகஜர் அ.சா.ஆ.6 ஆகவும், காய சான்றிதழ் அ.சா.ஆ.7 (1 - 4 வரிசை எண்)** ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சரிவர புலன் விசாரணை செய்யாமல் வழக்காவணங்களை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்துவிட்டு எதிரிகள் மீது தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரி சாட்சிகளிடம் இருந்து வாக்குமூலம் பதிவு செய்தது போல் சாட்சிகள் நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை என்றால் சரியல்ல. பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டிருக்கும் இடமானது தவறாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எதிரிகளை இவ்வழக்கில் இருந்து விடுவிக்க வேண்டும் என்றால் சரியல்ல.

ஒப்பம்/- இரா.மதுவர்ஷினி,
குற்றவியல் நடுவர்,
கூடுதல் மகிளா நீதிமன்றம்,
தருமபுரி.